# To Ibc news – தமிழ் செய்தி

## மறுப்பறிக்கையும் மூத்த வங்கியாளரது விளக்கமும்
### *உத்தரவைப் பின்பற்றாத வங்கிகள்*
### *யாழில்கொதித்தெழுந்த பொது மக்கள்*

மேற்படி தலையங்கத்தில் IBC தமிழ் வானொலியால் 24.03.2020 அன்று வெளியிடப்பட்ட செய்தி தொடர்பாக நாம் வேதனை அடைகின்றோம்.

இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொது முகாமையாளராகவும், வங்கியாளர்கள் சங்கம், வங்கிகளின் ஓய்வூதியர் சங்கம் போன்றவற்றின் தலைவராகவும் பணியாற்றி ஓய்வுபெற்ற நிலையிலுள்ள நான் வங்கி ஊழியர்களின் மன உழைச்சலை குறைக்கும் வண்ணம் இச் செய்தியை அனுப்புகிறேன்.

வடமாகாணத்தில் போர் வேகம் கருக்கொண்டு தாண்டவமாடிய காலத்தில் எம்மக்களுக்காக தங்கள் உதவிகளை தமது உயிரை துச்சம் என மதித்து வங்கிகள் தங்கள் சேவையினை இடையறாது தொடர்ந்து செய்தனர் செய்து கொண்டு இருந்தனர்.

அதே போல் இன்றும் முடிந்தளவு குறையும் தொய்வும் இன்றி தம் சேவையினை தொடர்ந்த வண்ணம் உள்ளனர்.

ஊரடங்கு தொடரும் வேளையிலும் போக்குவரத்து அற்ற நேரத்திலும் எம்மவர்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற நன்நோக்கோடு வடமாகாணத்தின் அன்றைய தினம் இயங்கிக் கொண்டிருந்தனர். குறிப்பாக நெடுந்தீவிலும் வங்கிக் கிளை திறந்து சேவைகள் வழங்கப்பட்டன.

இந்த நிலையில் இவ்வாறான செய்திகள் சமுக அக்கறையுடைய எந்த நபரையும் மனம் நோகச் செய்யும் செய்திகளாகவும் சொற்களாகவும் அமையும்.

நான் சேகரித்த விபரப்பட்படி

**உங்களால் பேட்டி காணப்பட்ட பெண்மணி**

1. சாவல் காட்டு வடக்கு தாவடியை சேர்ந்தவர்.
2. சாவல்காட்டில் வங்கி கிளை உண்டு
3. மானிப்பாயில் வங்கி கிளை உண்டு

4. கொக்குவிலில் வங்கிக் கிளை உண்டு
5. யாழ்நகரில் பல்வேறு வங்களின் பலவேறு கிளைகள் உண்டு
   (இவை யாவும் குறித்த கால நேரத்திற்கு மட்டும் சேவையை வழங்க வேண்டும் எனவும் நியதி இருந்தது.அதாவது 8 மணி தொடக்கம் 10 மணி வரை)
6. அவர் வங்கிக்கு வந்த நேரம் 11.15 ற்கு சற்று முன்னர்.
7. அவர் வங்கியில் சேவை பெற்ற நேரம் 11.30 மணி.
8. உங்கள் IBC தமிழ் செய்தியாளர், வங்கியின் முகாமையாளரை தொடர்பு கொண்டு சேவை பெற உதவுமாறு கோரினார். அதற்கமையவும் வேறு பல சேவை பெறுநர் வங்கி உள்ளகத்தில் இருந்தமையினாலும் இவரும் உள்வாங்கப்பட்டு சேவையினை பெற்றார்.
9. அவ்வங்கிக்கிளை இறுதி வாடிக்கையாளராக அரச திணைக்களக் கணக்காளர். இவர் சேவை பெற்று கிளையை விட்டு விலகிய நேரம் 1.00 மணி ஆகும்.
10. வங்கி கிளை ஊழியர்கள் வங்கிச் சேவை நிறைவு செய்து வீடுகளுக்குச் சென்ற நேரம் பிற்பகல் 1.30 ஆகும்.
11. வங்கி ஊழியர்களும், வாடிக்கையாளர்களைப் போன்று குடும்பப் பொறுப்பும் கடமையும் கொண்டவர்களேயாவர்.

ஊடாக தர்மம் கொண்டு உள்ளக ஊழியர்களின் உள மனத் தாக்கங்களை கருத்திற் கொண்டும் நியாயமான, உண்மையான,நீதியான சமூகத்திற்கு தேவையான செய்திகளை பொது மக்களுக்கு கொண்டு வரும் IBC தமிழ் செய்தி, இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டமை மனவருத்தம் தரும் செய்தியோடு கண்டிக்கத்தக்கதும் ஆகும்.

தயவு செய்து இந்த மறுப்பறுக்கையையும் ஏதோவொரு வகையில், பொது மக்களின் கவனத்திற்கு கொண்டு வந்து ஊடக தர்மத்தினை பின்பற்றுவீர்கள் என நம்புகிறேன்.

சகல வங்கி ஊழியர்கள் சார்பாக
........................................
ந.சிவரட்ணம் (ஓய்வுபெற்ற வங்கியாளர் சங்கங்களின் சார்பாக)
28.03.2020